https://puthusudar.lk/
puthusudar / புதுசுடர்

# புதுசுடர்

உண்மைக்கே முதலிடம்

26TH MAY 2024 | WWW.PUTHUSUDAR.LK | SUNDAY | ISSUE: 81





# ஜனாதிபதியின் பதவி காலத்தை நீடிப்பதற்கு சர்வஜன வாக்கெடுப்பு

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் பதவி காலத்தை மேலும் 5 வருடங்களால் நீடிப்பதற்காக சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்றொரு யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

சில நாட்களுக்கு முன் கூடிய ஐக்கிய தேசிய கட்சியின் செயற்குழுக் கூட்டத்தின்போதே இந்த விவகாரம் பேசப்பட்டு யோசனையாக முன்வைக்கப்பட்டுள்ளது.

அடுத்த மாதம் நடுப்பகுதியில் ஜனாதிபதி வேட்பாளர் யாரென்று அறிவிக்க வேண்டிய நிலையில்தான் இந்த யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்காரணமாக,தேர்தலை ஒத்திப்போடுவதற்கு ஜனாதிபதி திட்டம் போடுகிறாரா என்ற சந்தேகம் எழுகிறது.

மேலும், ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்ரமசிங்கவால் வெற்றி பெற முடியும் என்றால் சர்வஜன வாக்கெடுப்பு எதற்கு என்ற கேள்வியும் எழுகிறது.

## மோசடி சொத்துக்களை கைப்பற்றுவதற்கு சட்ட நடவடிக்கை



மோசடி மூலம் சம்பாதிக்கப்பட்டு உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் பதுக்கி வைக்கப்பட்டுள்ள சொத்துக்களை கைப்பற்றுவதற்கான நடவடிக்கையில் அரசு ஈடுபட்டுள்ளதாகவும் அதற்கான சட்ட ஏற்பாட்டுகளைச் செய்யவுள்ளதாகவும் அறிய முடிகிறது.

சர்வதேச நாணய நிதியத்துடன் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

இதற்கான சட்டமூலத்தை விரைவாக உருவாக்கும் பொறுப்பு நீதி அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சட்டமூலம் வெளிநாடுகளிலும் உள்நாட்டிலும் பதுக்கி

02 ➤

### நாடாளுமன்றத் தேர்தலே முதலில்!

## ஐக்கிய தேசியா கட்சியும் ஜனாதிபதிக்கு அழுத்தம்

நாடாளுமன்றத் தேர்தலே முதலில் நடத்தப்பட வேண்டும் என்று ஐக்கிய தேசிய கட்சியின் அதிகமானவர்கள் ஜனாதிபதிக்கு அழுத்தம் கொடுக்கத் தொடங்கியுள்ளனர் என்று அறிய முடிகிறது.

02 ➤

## ரணில் போட்டியிடுவாரா? முதலில் கூற வேண்டும்

ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்ரமசிங்க போட்டியிடுவதென்றால் அவர் அதுபற்றி நாட்டுக்கு அறிவிக்கும் முன் எமது கட்சிக்கு அறிவிக்க வேண்டும் என்று மொட்டு கட்சி அமைச்சர்கள் கூறியுள்ளனர்.

அமைச்சர் பிரசன்ன

02 ➤



புதுசுடர்
www.puthusudar.lk
2024 MAY 21 - SUNDAY

# ரைசிற்கு பின்னரான ஈரானின் எதிர்காலம்

ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசின் மரணத்துக்கு பின் ஈரானின் எதிர்காலம் என்னவாக இருக்கப்போகிறது,இஸ்ரேல் மற்றும் அமெரிக்கா தொடர்பிலான நிலைப்பாட்டில் மாற்றம் வருமா?சீனா மற்றும் ரஷ்யா உடனான உறவில் விரிசல் விழுமா? ஹமாஸ் அமைப்புக்கான உதவியில் சிக்கல் வருமா என்ற கேள்வியெல்லாம் இப்போது எழத் தொடங்கியுள்ளன.

ரைசின் மரணம் அமேரிக்கா,இஸ்ரேல் உள்ளிட்ட நாடுகளுக்கு மகிழ்ச்சியான விடயம் என்பதிலும் ஹமாஸ் இயக்கத்துக்கு கவலையான விடயம் என்பதிலும் மாற்றுக் கருத்துக் கிடையாது.

ரைஸ் ஈரானின் ஏனைய ஜனாதிபதிபோல் அல்லாது சற்று வித்தியாசமானவர்.சற்று இருக்கமானவர்.நாட்டுக்குள் அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள் ,கிளர்ச்சிகள் எழாதவாறு கட்டுப்பாட்டில் வைத்திருந்தவர்.

ஹிஜாபுக்கு எதிராக சிலர் அங்கு போராட்டம் நாடாத்தியபோது அதை முறியடித்தவர்.இதனால்தான் அவரது மரணத்தை சிலர் கொண்டாடவும் செய்தனர்.இரு ந்தாலும்,பெரும்பான்மையான மக்களின் அன்பை வென்றவர்.

பொதுவாக,உலக முஸ்லிம்கள் ஷீஆ ,சுன்னி என்று இரண்டு பிரிவாகவே உள்ளனர். ஆனால்,ரைசின் அண்மைக்கால செயற்பாடு அந்தப் பிளவை மறந்து அணைத்து முஸ்லிம்களும் ஒன்றிணைந்து நிற்கும் சந்தர்ப்பத்தை உருவாக்கியது.

இஸ்ரேல்-ஹமாஸ் போரின்போது ஹமாஸுக்கும் காஸாவுக்கும் அல்-அக்ஸா பள்ளிவாசலுக்கும் ஆதரவாக அவர் செயற்பட்டமையே இதற்குக் காரணம்.

ஹமாஸ் இயங்குவதே ஈரானின் முழு ஆதரவோடுதான். ஏனைய முஸ்லிம் நாடுகள் பார்த்துக்கொண்டிருக்க ஈரான் மாத்திரம் இவ்வாறு துணிந்து பலஸ்தீனத்துக்கு-அதைப் பாதுகாக்கத் துடிக்கின்ற ஹமாஸ/க்கு ஆதரவு வழங்கி வருகின்றமையானது உலக முஸ்லிம்கள் அனைவரையும் நெகிழச் செய்துள்ளது.ஈரான் மீது ஒரு பற்றை-பாசத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்த நிலைமை உருவாதற்கு காரணம் ரைஸ்தான்.ஹமாஸ்-இஸ்ரேலுக்கிடையில் இந்தத் தடவை இடம்பெற்ற போரின்போது யெமனின் ஹவ்தி கிளர்ச்சியாளர்கள்கூட ஹமாஸுக்கு ஆதரவாக களமிறங்கினர். மறுபுறம் லெபனானின் ஹிஸ்புல்லா.

இவ்வாறு மும்முனை தாக்குதல் இஸ்ரேல்மீது தொடுப்பதற்கு காரணம் ரைஸ்தான்.இந்தத் தாக்குதலில் இஸ்ரேல் அதிக சேதத்தை எதிர்கொண்டது.இஸ்ரேலிய மக்கள் நாட்டை விட்டே ஓடும் நிலை ஏற்பட்டது.இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவுக்கு எதிராக இஸ்ரேலுக்குள்ளே எதிர்ப்பு கிளம்பியது.மக்கள் வீதிக்கு இறங்கிப் போராடினர்.

அமெரிக்காவுக்கும் இஸ்ரேலுக்கும் பெரும் தலையிடியாக இருந்தவர் ரைஸ்.அப்படிப்பட்டவர் உயிரிழந்தமையால்தான் இது இஸ்ரேல்-அமெரிக்காவின் சதியாக இருக்குமோ என்ற சந்தேகத்தை எழுப்புகிறது.

இதேவேளை, உள்நாட்டிலும் சிலர் அவரை எதிர்த்து வந்ததால் அவர்களின் சதியாகவும் இது இருக்கலாமோ என்ற சாந்தேகமும் எழுகிறது.

எது எப்படியோ,ரைஸ் மரணித்துவிட்டார் என்பதற்காக இஸ்ரேல்-அமெரிக்கா தொடர்பான ஈரானின் கொள்கையில் மாற்றம் வரப்போவதில்லை என்பது நிச்சயம்.

ஈரான் ஹமாஸ் அமைப்பை கைவிடப் போவதுமில்லை பலஸ்தீன் போராட்டத்தை நிறுத்தப் போவதுமில்லை என்பதை உறுதியாகக் கூறலாம்.

ஆகவே,ரைசின் மரணம் என்பது பெரும் இழப்புதான் .ஆனால்,அது ஈரானின் நிலைப்பாட்டிற்கு-அதன் வளர்ச்சிக்கு எந்தவகையிலும் தடையாக இருக்கப்போவதில்லை என்பது மட்டும் நிச்சயம்.

## மோசடி...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

வைக்கப்பட்டுள்ள மோசடியானமுறையில் சம்பாதிக்கப்பட்டுள்ள சொத்துக்களை வெளிப்படையான முறையில் அரசமயப்படுத்துவதற்கு உதவி செய்யும் என நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ச கூறியுள்ளார்.

## நாடாளுமன்றத்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

நாடாளுமன்றத் தேர்தலை முதலில் நடத்துவதால் அரசுக்கு அதிக லாபம் உள்ளது என்று அவர்களும் மொட்டு கட்சியின் அதிகமானவர்களும் ஜனாதிபதிக்கு கூற்றியுள்ளனர்.

இதேவேளை, பசில் ராஜபக்சவும் அடிக்கடி ஜனாதிபதியைச் சந்தித்து நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவதற்கான அழுத்தத்தைக் கொடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## ரணில்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)


ரணதுங்கவின் ஏற்பாட்டில் இடம்பெற்ற அமைச்சர்களுடனான சந்திப்பின்போதே அமைச்சர்கள் பிரசன்ன ரணதுங்கவிடம் கூறினர்.

இந்தத் தகவலை ஜனாதிபதியிடம் எடுத்துக் கூறி உரிய பதிலைப் பெற்றுத் தருவதாக பிரசன்ன ரணதுங்கவும் மஹிந்தானந்த அழுத்கமவும் அந்த அமைச்சர்களிடம் கூறினர்.









# காலம் கடந்த ஞானம்

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தலைவர் பதவியில் இருந்து மைத்திரிபால சிரிசேன விலகியமை தற்போது அரசியல் அரங்கில் பேசப்படுகின்ற விடயங்களுள் முக்கியமான ஒன்றாகும்.

அரசியலில் ஜனாதிபதி பதவி போன்ற பெரிய பதவி வகித்த ஒருவர் எடுக்கும் கௌரவமான முடிவுதான் இது.இருந்தாலும்,இதை கௌரவமான செயற்பாடாகப் பார்க்க முடியாது.

அரசியலில் ரொம்பவும் சீரழிந்து-கட்சியின் தலைவர் பதவியை இழந்து-பேரெல்லாம் நாரிப் போன பிறகு-கட்சியின் தலைவர் பதவி நீதிமன்ற உத்தரவால் சிக்கலானதைத் தொடர்ந்து வேறு வழியில்லாமலேயே இந்த முடிவை எடுத்திருக்கிறார் மைத்திரி.

உண்மையில் அவர் ஜனாதிபதி பதவியில் இருந்து விடை பெற்ற உடனேயே அரசியலில் இருந்து முற்றாக விலகி இருக்க வேண்டும். முன்னாள் ஜனாதிபதிகள் ஜே.ஆர். ஜயவர்தன மற்றும் சந்திரிக்கா அம்மையார் போல்..

அதுதான் கௌரவமான ஒய்வு.இது அல்ல.மைத்திரி தலைவர் பதவியில் இருந்து விலகினாலும்கூட,அரசியலில் இருந்து ஒதுங்கவில்லை. ஆகவே,இது முழுமையற்ற ஒய்வாகும்.

மைத்திரி ஜனாதிபதியானது முதல் இன்றுவரை அவரது செயற்பாடுகள் எல்லாம் விமர்சனத்துக்கு உள்ளாகியே வருகின்றன.

இலங்கையின் ஜனாதிபதிகளில் கிறுக்குத்தனமாக முடிவெடுக்கின்ற ஒரு ஜனாதிபதியாக இருந்தவர் மைத்திரிபால சிறிசேனதான்.அவர் ஜனாதிபதி பதவியில் இல்லாத நிலையிலும்கூட அதையே செய்கிறார்.

நல்லாட்சியின்போது ரணிலும் மைத்திரியும் இணைந்து ஆரம்பத்தில்நன்றாகவே ஆட்சி செய்யத் தொடங்கினர். பின்னர் இருவருக்கும் இடையில் மனக்கசப்பு ஏற்படத் தொடங்கியதும் ரணிலுக்கு எதிராக சில கிறுக்குத்தனமான வேலைகளில் இறங்கத் தொடங்கினார்.

அதில் முக்கியமானதுதான் யாருமே எதிர்பார்த்திராத தருணத்தில் ரணிலை பிரதமர் பதவியில் இருந்து தூக்கிவிட்டு மஹிந்தவை பிரதமராக நியமித்தமை.அப்போது கீரியும் பாம்புமாக இருந்த மஹிந்தவும் மைத்திரியும் ஒன்றுசேருவார்கள் என்று யாரும் எதிர்பார்த்திருக்கவில்லை.

மைத்திரி ஜனாதிபதியானதும் மஹிந்தவிடம் இருந்து சிறிலங்கா சுதந்திர கட்சியின் தலைமைத்துவப் பதவியைக்கூட பறித்திருந்தார்.இதனால் இருவருக்கும் இடையிலான விரிசல் மேலும் அதிகரித்தது.இதனால் அவர்கள் இணைவதென்பது சாத்தியமற்றதாகவே இருந்தது. ஆனால், ரணிலுடன் முரண்பட்டுக் கொண்டதால் -அவரைப் பதவியில் இருந்து நீக்குவதற்காக யாருடனும் கூட்டுச் சேர்வார் என்று யாரும் நம்பவில்லை.

அப்படி யாரும் எதிர்பார்த்திராத தருணத்தில்தான் ரணிலை நீக்கிவிட்டு மஹிந்தவைப் பிரதமராக்கினார். அவர் எடுத்த அந்த முடிவு அவருக்கு அவப்பெயரையே பெற்றுக்கொடுத்தது. அதன்பின் அவர் மொட்டு கட்சியுடன் இணைந்து 2020 நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டபோதும் அவருக்கு அந்தக் கட்சிக்குள் மதிப்புக் கிடைக்கவில்லை.

இதனைத் தொடர்ந்தும் அவரது செயற்பாடுகள் எந்தவொரு முன்அறிவித்தாலும் இல்லாத-சற்றுகூட ஊகிக்க முடியாத கிறுக்குத்தனமாகவே இருந்தன.அதில் ஒன்றுதான் அவர் தயாசிறி ஜயசேகரவை சிறிலங்கா சுதந்திர கட்சியின்பொது செயலாளர் பதவியில் இருந்து நீக்கியமை. அதுவும் அவருக்கு நல்ல பெயரை ஈட்டிக்கொடுக்கவில்லை.

அவரை அந்தப் பதவியில் இருந்து நீக்கிவிட்டு மீண்டும் அவரை அழைத்துபிரதி சிரேஷ்ட உப தலைவர் பதவி தருகிறேன் என்று கூறினார். தயாசிறி அதை ஏற்கவில்லை.

அதனைத் தொடர்ந்து துமிந்த திஸா நாயக்க,லசந்த அழகியவண்ண மற்றும் மஹிந்த அமரவீர ஆகியோரையும் அவர்கள் வகித்து வந்த கட்சி பதவிகளில் இருந்து நீக்கினார். அவர்கள் நீதிமன்றம் சென்றனர்.மைத்திரி கட்சியின் தலைவராக செயற்படுவதற்கு நீதிமன்றம் இடைக்கால தடை ஒன்றை விதித்தது.

மைத்திரியை முற்றாக நீக்கிவிட்டு சந்திரிகாவை கட்சியின் தலைவராக நியமிப்பதற்கு மைத்திரியின் எதிரிகள் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

ஒரு காலத்தில் சந்திரிகாவின் அதி விசுவாசியாக இருந்தவர் மைத்திரி.அந்த நம்பிக்கையின் காரணமாகவே 2015 ஜனாதிபதி தேர்தலில் பொது வேட்பாளராக மைத்திரியை இறக்கினார் சந்திரிகா.ஆனால், மைத்திரி ரணில் விக்கிரமசிங்கவை பிரதமர் பதவியில் இருந்து நீக்கிவிட்டு மஹிந்த ராஜபக்சவை பிரதமராக நியமித்ததன் காரணமாக சந்திரிகா-மைத்திரி உறவு துண்டானது.

மைத்திரி சந்திரிக்காமீது வைத்திருந்த விசுவாசம் எல்லாம் வேஷம் என்றானது.

மைத்திரியை சு.க தலைமை பதவியில் இருந்து நீக்குவதற்கு அன்றிலிருந்தே முடிவெடுத்துவிட்டார் சந்திரிக்கா. மைத்திரியின் பலவீனத்தை கிறுக்குத்தத்தனத்தை பயன்படுத்தி மைத்திரியை வீழ்த்துவதற்கு சந்தர்ப்பம் பார்த்து காத்திருந்தார் சந்திரிகா.

சந்திரிகாவின் விசுவாசிகள் சு.கவுக்குள் அதிகம்.அதனால்தான் அண்மைக்காலமாக சந்திரிக்காவை கட்சிக்குள் எடுக்க வேண்டும் என்ற கோசம் கட்சிக்குள் முன்வைக்கப்பட்டுக்கொண்டு வருகிறது.

இந்த நிலையில்தான்,அவர் பார்த்த வேலையின் காரணமாக அவரை கட்சியின் தலைவராக செயற்படுவதற்கு நீதிமன்றம் தற்காலிக தடையை விதித்தது.

இதனைத் தொடர்ந்து சந்திரிக்காவை தலைவராக்குவதற்கான முயற்சிகள் தீவிரமடைந்துள்ளன.சந்திரிக்கா வியூகம் வகுப்பதில் கெட்டிக்காரி. தனக்கு அநீதி செய்த மஹிந்தவை 2015 இல் சமயம் பார்த்துக் கவிழ்த்தவர்.

அவசரப்படாமல் - அமைதியாக இருந்து காய் நகர்த்துபவர். அதே நகர்த்தலைத்தான் மைத்திரிக்கு எதிராகவும் செய்து வந்தார்.

இந்த நிலையில்தான் மைத்திரி தலைவர் பதவியைத் துறந்துவிட்டு விஜயதாச ராஜபக்சவை பதில் தலைவராக நியமித்துள்ளார்.

மைத்திரி ஜனாதிபதியாக இருந்தபோதும் சரி, அதன் பின்பும் சரி திறமையற்ற ஒரு தலைவனாகவே இருந்துள்ளார். அப்படிப்பட்ட ஒருவர் கட்சித் தலைவர் பதவியில் இருந்து விலகுவது நல்ல முடிவுதான்.



# வாடிக்கையாளர்களுக்கு தங்கப் பவுண்கள்

சுதேசி நிறுவனமானது, அதன் விசுவாசமான ராணி சந்தன சவர்க்காரத்தை பயன்படுத்தும் விசுவாசமான வாடிக்கையாளர்களுக்கு, 6 வாரங்களுக்கு வாராந்தம் தலா 3 தங்க நாணயங்கள் வீதம் 22 கரட்டில் அமைந்த தங்கத்தை வழங்குகிறது.

WhatsApp (077 0089716) ஊடாக அல்லது Rani Sandalwood பேஸ்புக் பக்கத்தின் ஐடிழுஒ இற்கு ராணி சந்தன சவர்க்காரத்தின் இரண்டு வெற்று பெட்டிகளுடன் வாடிக்கையாளரின் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம், தொலைபேசி இலக்கத்தை அனுப்புவதன் மூலம் அல்லது "ராணி சந்தன தங்க ராணிகள்", தபால் பெட்டி இல 04, கந்தானை எனும் முகவரிக்கு அனுப்புவதன் மூலம், ரூ. 3 மில்லியன் பெறுமதியான 22




கரட் கொண்ட 18 தங்க நாணயங்களை, ஆறு வார காலப்பகுதியில் வெல்லும் வாய்ப்பை பெற வாடிக்கையாளர்கள் தகுதி பெறுவார்கள் என நிறுவனம் அறிவித்துள்ளது.

2024 மே மாதம் முதல் 2024 ஜுன் 30 ஆம் திகதி வரை இடம்பெறும் இந்த ஊக்குவிப்பு பிரசாரம் மூலம், வாராந்தம் குலுக்கல் மூலம் வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்படுவார்கள். வாடிக்கையாளர்கள் Rani Sandalwood பேஸ்புக் பக்கத்தை பின்தொடர்வதன் மூலம் மேலதிக தகவல்களையும் எதிர்கால அறிவிப்புகளையும் அறிந்து கொள்ளலாம்.

மிகவும் நம்பகமான மற்றும் தூய்மையான சந்தனத்தை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படும் அழகு சவர்க்காரமான ராணி சந்தன சவர்க்காரமானது, சந்தையில் 80 வருட மிகவும் நம்பகமான தயாரிப்பாக திகழ்கின்றது.

# Castrol இன் 125ஆவது ஆண்டு நிறைவு




இலங்கையில் ஊயளவசழட லுப்ரிகன்ட்களின் ஒரே விநியோகஸ்தரான Associated Motorways (Private) Limited, (AMW) லுப்ரிகன்ட்களில் உலகளாவிய முன்னணி நிறுவனமும் BP குழுமத்தின் ஒரு அங்கத்தவரான Castrol இன் 125ஆவது வருட நிறைவைக் கொண்டாடுகிறது.

இந்த முக்கியமான தருணமானது, Castrol இன் செழுமையான பாரம்பரியத்தை கௌரவிப்பதோடு மட்டுமல்லாமல், அதன் தொடர்ச்சியான புத்தாக்க கண்டுபிடிப்புகள் மற்றும் லுப்ரிகன்ட் துறையில் சிறந்து விளங்குவதற்கான அர்ப்பணிப்பையும் எடுத்துக்காட்டுகிறது.

அது மாத்திரமன்றி, AMW மற்றும் ஊயளவசழட ஆகியன 25 வருடங்களைக் கொண்ட மிக முக்கியமான அதன் கூட்டாண்மைக்கான மைல்கல்லை எட்டியுள்ளன. இந்த மைல்கல் ஆனது, இந்த கூட்டாண்மையின் வலிமையையும் இலங்கை வாடிக்கையாளர்களுக்கு உயர்தர லுப்ரிகன்ட் தீர்வுகளை வழங்குவதற்கான பகிரப்பட்ட தூர நோக்கிற்கான ஒரு சான்றும் ஆகும்.

Castrol தனது 125ஆவது ஆண்டை 'Onward, Upward, Forward' (நேராக, மேல்நோக்கி, முன்னோக்கி) எனும் தலைப்பிலான ஒரு உறுதியான புதிய மூலோபாய தூரநோக்கை அறிமுகப்படுத்துவதன் மூலம் கொண்டாடுகின்றது.

இந்த முன்னோக்குச் சிந்தனை அணுகுமுறையானது, உலகெங்கிலும் உள்ள வாடிக்கையாளர்களின் அதிகரித்து வரும் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. அதனுடன் இணைந்தவாறு 2024 முழுவதும் இடம்பெறும் நிகழ்வுகள் மற்றும் அனுசரணைகளில் இடம்பெறும் வகையில் விசேட 125 வருட நினைவுச் சின்னமும் வெளியிடப்பட்டுள்ளது.

# Medihelp இன் புற்றுநோய் தடுப்பு விழிப்புணர்வு

இலங்கையின் மிக வேகமாக வளர்ந்து வரும் அடிப்படை சுகாதார சேவை வழங்குனரான Medihelp Hospitals, அண்மையில் புரோசுட்டேட் புற்றுநோய் தடுப்பு மற்றும் கண்டறிதல் குறித்த விழிப்புணர்வு கருத்தரங்கை ஏற்பாடு செய்துள்ளது.

சிங்கப்பூரில் உள்ள மவுண்ட் எலிசபெத் மற்றும் இலங்கையில் உள்ள ஐஉஉ நோயாளி பராமரிப்பு நிலையத்துடன் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்ட இந்த விழிப்புணர்வு கருத்தரங்கு, கொழும்பு லிப்டன் சுற்றுவட்டத்தில் புதிதாக நிறுவப்பட்ட Medihelp Wellness Centre இல் நடைபெற்றது.

Medihelp வைத்தியசாலையின் தலைவர் லெஸ்லி விஜேசிறிவர்தன, ஆய்வக பணிப்பாளர் சுனந்த விஜேசிறிவர்தன, வைத்திய பணிப்பாளர் டொக்டர் சரித விஜேசிறிவர்தன, நிறைவேற்று பணிப்பாளர் சந்திகா விஜேசிறிவர்தன, பிரதம செயற்பாட்டு அதிகாரி நிஷாந்த ஜயமான்ன உட்பட பல முக்கியஸ்தர்கள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

மவுண்ட் எலிசபெத் மருத்துவமனையின் பிராந்திய முகாமையாளர் Aliff Bin Arshad மற்றும் IHH நோயாளி பராமரிப்பு நிலையத்தின் இலங்கை அலுவலகத்தின் பணிப்பாளர் Shuvo Hridayesh ஆகியோரும் இதில் இணைந்தனர்.

புரோசுட்டேட் புற்றுநோயை எதிர்த்துப் போராடுவதை நோக்கமாகக் கொண்ட இந்த கருத்தரங்கு, சிறுநீரக அறுவை சிகிச்சை மற்றும் சிறுநீர்ப்பை கோளாறுகளில் நிபுணரான டொக்டர் Chin Chong Min தலைமை தாங்கினார். சிங்கப்பூரில் உள்ள மவுண்ட் எலிசபெத் ழேஎநயெ மருத்துவமனையில் பணிபுரியும் டொக்டர் Chin Chong Min, Laparoscopic, Robotic அறுவை சிகிச்சை போன்ற நவீன முறைகளைப் பயன்படுத்தி புரோசுட்டேட் புற்றுநோய் உள்ளிட்ட சிறுநீர்ப்பை புற்றுநோய்க்கு சிகிச்சை அளித்த அனுபவத்தை இந்நாட்டு மக்களுடன் பகிர்ந்து கொண்டார்.

# ஊடக கல்வியறிவு திட்டங்களை அறிமுகப்படுத்தும் TikTok

புத்தாக்கமான வடிவமைப்பின் மூலம் எப்போதும் புத்தம் புதிய அனுபவத்தைச் சேர்க்கும் திறன் கொண்ட வுமைவழம, யுஐ தொடர்பான வெளிப்படைத்தன்மை மற்றும் எழுத்தறிவு ஆகியவற்றில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களைச் செய்துள்ளதாக அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறது.

படைப்புகள் வெவ்வேறு தளங்களின் கீழ், குறிப்பாக உருவாக்கும் இடம் (Content Provenance) மற்றும் நம்பகத்தன்மை (Authenticity) ஆகியவற்றின் கீழ் AI ஆல் உருவாக்கப்பட்ட உள்ளடக்கத்தை தானாகவே அடையாளம் காண, உள்ளடக்க நற்சான்றிதழ்கள் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தும் முதல் வீடியோ உருவாக்கும் தளமாகவும் வுமைவழம மாறியுள்ளது.

AI மூலம் உருவாக்கப்பட்ட உள்ளடக்கத்தின் சாத்தியமான சவால்களை உணர்ந்து, வெளிப்படைத்தன்மையை அதிகரிக்க ஒரு வலுவான மாதிரியை உருவாக்குதல், TikTok இன் திட்டம் தானாகவே அனைத்து AI தாக்கம் கொண்ட உள்ளடக்கத்தையும் லேபிளிடுகிறது.

கடந்த ஆண்டில், 37 மில்லியனுக்கும் அதிகமான வடிவமைப்பாளர்கள் லேபிளிங் மூலம் பயனடைந்துள்ளனர், அந்த வடிவமைப்புகளின் தோற்றம் பற்றிய தெளிவான புரிந்துகொள்ளுதலை வழங்குகிறது.

தனது படைப்புகளின் வெளிப்படைத் தன்மையை விரிவுபடுத்தி, அதன் அனைத்து உள்ளடக்கங்களுக்கும் அங்கீகாரத்தை மிக விரைவாக விரிவுபடுத்தியுள்ள TikTok, அந்த உள்ளடக்கங்களின் metadatait பதிவிறக்கம் செய்தாலும் அங்கேயே இருக்கச் செய்திருப்பது சிறப்பு. இதன் மூலம், பாவனையாளர்களுக்கும் பிற தளங்களுக்கும் உள்ளடக்க உருவாக்கத்தின் சரியான தன்மையை உறுதிப்படுத்த தேவையான டிஜிட்டல் தரநிலையை TikTok உருவாக்கியது.




# Samsungஇன் இதயத்தில் அம்மாக்கள்

தொழில்நுட்பத்தின் எப்போதும் வளர்ந்து வரும் நிலப்பரப்பில், ஒரு அமைதியான சக்தி உள்ளது, இது பெரும்பாலும் கவனிக்கப்படாமல் இருந்தாலும் மறுக்க முடியாத செல்வாக்கு:

அதுதான் அம்மா. உலகெங்கிலும் உள்ளதைப் போலவே, இலங்கையிலும், தாய்மார்கள் நுகர்வோர் மட்டுமல்ல, ளுயஅளரபெ போன்ற நிறுவனங்களில் புத்தாக்கங்களின் பாதையை வடிவமைக்கும் வழிகாட்டிகள் மற்றும் செல்வாக்கு செலுத்துபவர்கள். சர்வதேச அன்னையர் தினத்தை முன்னனிட்டு, Samsungன் புரட்சிகர தயாரிப்புகள் மற்றும் சேவைகளின் திரைகளுக்குப் பின்னால் புத்தாக்கமான செயல்களை ஆற்றும் நிஜ வாழ்க்கை அனுபவங்களும் நுண்ணறிவுகளும் இந்த போற்றப்படாத ஹீரோக்களைப் பற்றி பிரகாசிக்க வேண்டிய நேரம் இது.

Samsungன் நிதி நிர்வகிப்பாளர்களில் ஒருவரான நிலங்கா திலினியின் கணவர் ரசிக, ளுயஅளரபென் போக்கை வழிநடத்துவதில் தாய்மார்களின் ஆழமான தாக்கத்தை ஒப்புக்கொள்கிறார்:

"வேலை மற்றும் குடும்பம் இரண்டையும் நிலங்கா திறமையாக கையாளுவதால், தொழில்நுட்பத்திற்கும் குடும்ப வாழ்க்கைக்கும் இடையே உள்ள சிக்கலான சமநிலையை நான் புரிந்துகொள்கிறேன்.

அவரது பங்கு தொழில்முறைக்கு அப்பால் நீண்டுள்ளது. உண்மையில், Samsung தாய்மையின் பன்முகத் தன்மையை அங்கீகரிக்கிறது மற்றும் அதன் பணியாளர்களுக்குள் தாய்மார்களை தீவிரமாக மேம்படுத்துகிறது. நெகிழ்வான பணி ஏற்பாடுகள், பெற்றோர் விடுப்புக் கொள்கைகள் மற்றும் ஆதரவு நெட்வொர்க்குகள் ஆகியவை தாய்மார்கள் தனிப்பட்ட முறையில் மற்றும் தொழில் ரீதியாக செழிக்க முடியும் என்பதை Samsung உறுதி செய்யும் சில வழிகள். அவர் மேலும் கூறுகிறார்,

# தடையுத்தரவு நீடிப்பு

நவலோக்க மருத்துவ நிலையத்தை கையகப்படுத்துவதற்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட தடை உத்தரவுக்கு எதிராக உடீே முன்வைத்த ஆட்சேபனைகளை நிராகரித்த மேன்முறையீட்டு நீதிமன்றம், வழக்கின் இறுதித் தீர்ப்பு வழங்கப்படும் வரை, நவலோக்க மருத்துவ நிலையத்தின் சொத்தை பராட்டே சட்டத்தின் கீழ் சுவீகரிப்பதற்கு எதிராக, மேன்முறையீட்டு நீதிமன்றம் இதற்கு முன்னர் வழங்கிய தடையுத்தரவை நீடிப்பதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

நவலோக்க மருத்துவமனை குழுமத்தின் துணை நிறுவனமான நவலோக்க மருத்துவ நிலையத்தினால் கடனாகவும் வட்டியாகவும் உடீே இற்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையான ரூ. 600 மில்லியன் தொடர்பில், பராட்டே சட்டத்தின் கீழ் நவலோக்க வைத்தியசாலையின் வளாகமொன்றை ஏலத்தில் விடும் அவ்வங்கியின் தீர்மானத்தை நீதிமன்றில் சவாலுக்குட்படுத்த நவலோக்க மருத்துவ நிலையம் நடவடிக்கை எடுத்திருந்தது. அதன்படி கடந்த மார்ச் மாதம் இந்தச் சம்பவம் தொடர்பில் மேன்முறையீட்டு நீதிமன்றம் இடைக்காலத் தடையுத்தரவொன்றை பிறப்பித்தது.

இதேவேளை, நவலோக்க மருத்துவமனை குழுமத்துடன் இணைந்த அதன் துணை நிறுவனங்களால் பெறப்பட்ட அனைத்து கடன்கள் மற்றும் வட்டித் தவணைகளை உரிய முறையில் மீளச் செலுத்துவதற்குரிய, வலுவான நிதி ஆதாரங்கள் நவலோக்க மருத்துவமனை குழுமத்திற்கு உள்ளது எனவும், இந்த நிலைமையானது நவலோக்க மருத்துவமனை குழுமத்தின் அன்றாட நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதில் எந்தவொரு தடையையும் ஏற்படுத்தாது எனவும் தனது பங்குதாரர்களுக்கும் பொதுமக்களுக்கும் நவலோக்க மருத்துவமனை குழுமத்தினால் அறிவிக்கப்படுகின்றது.




# Syscoவின் 10 வருட பூர்த்தி

உணவு சேவைகள் துறையில் சர்வதேச முன்னோடியாகத் திகழும் Sysco LABS இன், Global in-house Centre (GIC), இலங்கையில் தனது பத்து வருட பூர்த்தியை கொண்டாடியது.

இந்த முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வில், இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சாங், அமெரிக்க தூதரக அதிகாரிகள், அமெரிக்க வர்த்தக சம்மேளனத்தின் தலைமைத்துவ அதிகாரிகள், Sysco வின் சர்வதேச தொழில்நுட்ப தலைமைத்துவ அணியினர், Sysco LABS தலைமைத்துவ அணியினர் மற்றும் ஊடக பிரதிநிதிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் Sysco நிறைவேற்று உப தலைவரும் பிரதம தகவல் மற்றும் டிஜிட்டல் அதிகாரியுமான டொம் பெக் உரையாற்றும் போது, Sysco இன் தற்போதைய மற்றும் எதிர்கால செயற்பாடுகளில் தொழில்நுட்பத்தின் முக்கிய பங்கு தொடர்பில் குறிப்பிட்டார்.

"உலகளாவிய ரீதியில் 725,000 க்கும் அதிகமான வாடிக்கையாளர் பகுதிகளில் 72,000 க்கும் அதிகமான ஊழியர்களைக் கொண்டு, வெற்றிகரமாக இயங்குவதற்கு அவசியமான பரந்த தொழில்நுட்பத்தை ஈடுபடுத்தி Sysco செயலாற்றுகின்றது. சர்வதேச சந்தை முன்னோடி எனும் வகையில், புத்தாக்கத்தை அடிப்படையாகக் கொண்டு Sysco இயங்குவதுடன், புதிய தொழில்நுட்பத்தை பின்பற்றுகின்றது. இந்த நிலையில் இலங்கையின் அணி எமக்கு போட்டிகரமான அனுகூலத்தை வழங்குகின்றது." என்றார்.

# Kaspersky Next அறிமுகம்



Kaspersky இலங்கையில் வணிகங்களின் பாதுகாப்பிற்காக 'Kaspersky Next' என்ற தனது புதிய தயாரிப்பு வரிசையை அண்மையில் அறிமுகப்படுத்தியது.

XDR (Extended Detection and Response) இன் தெளிவு மற்றும் சக்திவாய்ந்த கருவிகள் மற்றும் EDR இன் வேகம் மற்றும் வெளிப்படைத்தன்மை (Endpoint Detection and Response) மூலம், வணிகத் தரவுகளுக்கு வலுவான பாதுகாப்பை வழங்க முடியும்.

அதன் காரணமாக, வாடிக்கையாளர்கள் தங்கள் வணிகத் தேவைகளுக்கு ஏற்ற தயாரிப்புகளைத் தேர்ந்தெடுக்கும் திறனைக் கொண்டிருப்பதைச் சுட்டிக்காட்டலாம்.

மாறிவரும் இணையத்தள அச்சுறுத்தல்களுக்கு மத்தியில், வணிகங்களுக்கு நம்பகமான, பயனுள்ள இணையத் தள பாதுகாப்பு தீர்வு தேவை. Enterprise Strategy Groupன் சமீபத்திய XDR மற்றும் SOC அறிக்கைகள், மேம்பட்ட இணையத்தள அச்சுறுத்தல்களைக் கண்டறிந்து விசாரிக்கக்கூடிய தகவல் பாதுகாப்புக் கருவிகளைக் கண்டறிய நிறுவனங்கள் தொடர்ந்து ஆர்வமாக இருப்பதைக் காட்டுகின்றன.

வணிக நிறுவனங்களின் தேவைகளைப் புரிந்துகொண்டு, இணையப் பாதுகாப்பின் அடிப்படையில் புத்தாக்கமான மற்றும் தொழில்நுட்ப சேவைகளை வழங்கும் உலகின் முன்னணி வழங்குநரான Kaspersky, வணிக நிறுவனங்களுக்கு நம்பகமான இணையப் பாதுகாப்புத் திட்டத்தை வழங்குவதன் மூலம் தீர்வுகளை வழங்குவதில் பணியாற்றியுள்ளது.

# யூனியன் அஷ்யூரன்ஸ் நிறுவனத்துக்கு விருது




இலங்கையின் முன்னணி ஆயுள் காப்புறுதி சேவைகள் வழங்குநரான யூனியன் அஷ்யூரன்ஸ், 2023 ஆம் ஆண்டுக்கான சிறந்த முகாமையாளர்களுக்கான விருதுகள் நிகழ்வில் கௌரவிப்பைப் பெற்றிருந்தது.

2024 ஏப்ரல் 4ஆம் திகதி கொழும்பு கிங்ஸ்பரி ஹோட்டலில் நடைபெற்ற இந்த நிகழ்வை, Colombo Leadership Academy ஏற்பாடு செய்திருந்தது. மக்கள் முகாமைத்துவத்தில் சிறப்பை பேணுகின்றமையை கௌரவிக்கும் வகையில், சிறந்த தலைமைத்துவ செயற்பாடுகள், ஊழியர் வளர்ச்சி மற்றும் விருத்தியை ஊக்குவித்தல் மற்றும் சிறந்த பெறுபேறுகளை ஏற்படுத்திக் கொடுக்கும் நிறுவனங்களை கௌரவிக்கும் வகையில் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்படுகின்றது.

இந்நிகழ்வின் போது, யூனியன் அஷ்யூரன்ஸ், "சிறந்த முகாமையாளர்களைக் கொண்ட நிறுவனம்" எனும் கௌரவிப்பை தொடர்ச்சியான மூன்றாவது ஆண்டாகவும் பெற்றுக் கொண்டது.

ஊழியர்களின் வெற்றிகரமான செயற்பாடுகளுக்கு தூண்டுகோலாக அமைந்திருப்பது, பொருத்தமான பயிற்சித் திட்டங்களை வழங்குவது, போதியளவு வள வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பது மற்றும் ஒப்பற்ற ஆதரவளிப்பது போன்றவற்றுக்கான அர்ப்பணிப்பு மீண்டும் உறுதி செய்யப்பட்டிருந்தது.

# தொடக்கநிலை வணிகங்களை வளர்க்கும் Uber




உலகளாவிய சவாரி சேவைகள் வழங்குனரும், உணவு மற்றும் மளிகைப் பொருட்களின் விநியோகத் தளமுமான Uber, நாட்டில் தொழில்முயற்சிக் கட்டமைப்பை வலுப்படுத்தும் முகமாக, இலங்கையில் தொடக்கநிலை வணிகங்களை ஊக்குவிக்கும் ஒரு முயற்சியான "Uber Springboard" என்பதை இன்று நடாத்தியுள்ளது.

இலங்கை அரசாங்கத்தின் தொழில்நுட்ப அமைச்சின் ஆதரவுடன், இந்தியாவிலுள்ள Uber இன் சிறப்பு மையத்திற்கு வழிகாட்டல் நிகழ்ச்சித்திட்டமொன்றில் பங்கேற்பதற்கு பிரயாணிப்பதற்காக, தொழில்நுட்ப தொடக்க வணிகப் போட்டியின் மூலமாக 3 தொடக்கநிலை வணிகங்களை Uber தேர்ந்தெடுத்துள்ளது.

DIGIECON 2030 இன் ஒரு அங்கமாக, Uber இன் தொழில்நுட்ப தலைவர்கள் 26 இலங்கை தொடக்கநிலை வணிகங்களுடன் இடைத்தொடர்பாடி, பின்னூட்டம் மற்றும் வழிகாட்டலை வழங்கியுள்ளனர்.

கடுமையான மதிப்பீட்டு நடைமுறையைத் தொடர்ந்து, Uber Springboard திட்டத்தின் நடுவர் குழாம்.

மேலதிக வழிகாட்டலை வழங்குவதற்காக KReader, ManKiwwa, மற்றும் Megic ஆகிய 3 தொடக்கநிலை வணிகங்களை தேர்ந்தெடுத்துள்ளனர்.